தமிழ் வாழ்க



தலைவர் ஈ. வே. ராமசாமி பெரியார் அவர்களை
வாழ்த்தியும், கட்டாய இந்தியை எதிர்த்தும்
பல அறிஞர்களால் பாடிய

தமிழ் கீதாம்ருதம்

இஃது பௌத்த சங்க அங்கத்தினர்
ஆர். சிவசாமி உபாசகரால்
வெளியிடப்பட்டது.

நெ. 5, சேஷகிரி அய்யா தெருவு, நப்பேட்டை, சென்னை.

சென்னை டெக்கான் பிரஸில் பதிப்பிசசப்பட்டது.

1938.

விலை பை 6.

தலைவர் ஈ. வே. ராமசாமி பெரியார் அவர்களை
வாழ்த்தியும், கட்டாய இந்தியை எதிர்த்தும்
பல அறிஞர்களால் பாடிய

இந்தி எதிர்ப்புக் கீதங்கள்.

—.........—

திரு. ஆர். பி. தங்கவேலன்

விருத்தம்.

உலகுயர் கலையில் தேர்ந்த உயர்குண இராம சாமி
...யதோர் இயக்கங் கண்டே உறங்குவோர் தன்னைத் தட்டிப்
...பர்கள் அறியும் வண்ணம் பகுத்துணர் விதையை நாட்டிப்
...ண்புற ஓங்கி நிற்கப் பலன்தரு விருட்ச மாக்கிப்
...ம உரிமை யாண்டும் பாமரர் மேலோர் கொண்டு
...ங்குடன் தமரர் ஆகப் பழிப்பினை ஒழித்தே நாளும்
...தரு வழியை நாடி நாட்டினோர் வாழ்க என்று
...ந்தரு மொழியில் சொன்ன நாவலன் கீர்த்தி மாதோ!

...பனர் செய்யுஞ் சூட்சி பாருள்ளார் அறியும் வண்ணம்
...திேயே பத்தி யாகப் பழுதற ஓதி நாளும்
...புற மக்கள் உள்ளம் ஆத்திரம் வழிந்தே ஈண்டு
...வென விழித்து நின்று தூவென அகற்றும் எச்சில்
... போலப் யொங்கி அழித்தவண் ஒழிக்கச் செய்யும்
...மைச்சரும் அறியா திங்ஙன் ஆழமே தெரியா திந்தித்
...பையே சட்ட மாக்கித் திணறுற ஆடிக் காற்றில்
...ந்தமுங் கலங்கி எங்கள் சீர்அழிக் கவந்த தேனோ?

...யம் அவர்தம் கொள்கை தன்னலங் கருதா வாழ்க்கை
...லரும் ஒன்றே எண்ணி சமத்துவம் ஈந்த மூர்த்தி
...யே ஏழைத் தொண்டு பலர்சம சுகமே முத்தி
...ர்ப்பனா மறையே வஞ்சம் பொய்சூது களவும் என்று
...மே புதிய கொள்கை புகலுறும் வண்மை யாளர்
...கழிகழ் கொள்ளா தெங்கள் புண்யா ரோடு செம்மல்
...கை குணங்கள் வாய்ந்தோன்! இந்தியை எதிர்த்த தாலே
இட்டனர் மூன்றே ஆண்டங் கிருக்கவே சிறையில் அந்தோ!

—

திரு. ஆர். பி. தங்கவேலன் (பாடியது)

(ஏதி கதி நாகு—என்ற மெட்டு.)

பல்லவி

என்ன அநியாயம் நீதியின் நியாயம் (என்)

அநுபல்லவி

இன்னலை எடுத்து இயம்புவ திழிவாம்
இன்பத்தை யடைய முயல்வது பழியாம் (என்)

சரணங்கள்

பார்ப்பனர் செய்யும் பழியினை மொழிந்தால்
பாராளுஞ் சட்டமோ அடைக்குதே சிறையில்
ஆரிய வேதங்கள் இகழ்மொழிக் கிருக்க
ஆட்சியேன் அதனை அடக்காத தேனோ? (என்)

தாய்மொழிக் காக்கத் தயங்காமல் நின்று
தாய்மார்கள் வீரங் கொண்டனர் இன்று
சேய்களும் ஈண்டுச் சிறைக்கோட்டஞ் சென்று
சேவைகள் செய்குதே அறக்கோட்டம் என்று (என்)

திருச்சி விசுவநாதம்

(தக்ஷயக்ஞத்தில் ராஜகுரு பாடிய பவாநீ வர்ணமெட்டு)

தமிழ் மகனே! தமிழ் மகனே!! தமிழ் மகனே!!!
தமிழா! உன் தோள்வலிமை தரணியெலாம் அறியாதா?
தமிழ்மொழியைக் கொலை புரிந்து தாழ்வடைந்து வாழ்வாயா?
தமிழ்த்தாயின் தனிக்கொடியை தாங்கி உயர்த்த லாகாதா?
தமிழ்நாடு தமிழர்க்கே என்றுரைக்க லாகாதா?

உறக்கமா! உறக்கமா!! உறக்கமா!!!
கட்டாய இந்திதனை கண்டதுண்ட மாக்காயா?
காங்கிரசின் கொடுஞ்செயலைக் கண்விழித்துப் பாராயா?
அடக்குமுறை ஆட்சிதனை அடக்கிவைத்த லாகாதா?
இடக்குசெய்யும் காங்கரசை எதிர்த்தொழிக்க ஏலாதா?

எழுந்திரு! அன்பனே!! விழித்திரு!!!
செல்லுக்குத்தும் ஜெயிற்கொடுமை நீ நினைத்துப் பாராயா?
புல்லுருவி மாந்தர்க்குப் புத்தி சொல்ல லாகாதா!
ஒன்பது நூற்றாண்டு உறங்கியது போதாதா?
விழிப்படைய நினைத்து விட்டால் வெற்றியுன தாகாதா?

(பாரதி தாசன்)

கனியிடை ஏறிய சுளையும்—முற்றல்
கழையிடை ஏறிய சாறும்,
பனிமலர் ஏறிய தேனும்—காய்ச்சுப்
பாகிடை ஏறிய ருசியும்.

நனிபசு பொழியும் பாலும்—தென்னை
நல்கிய குளிரிள நீரும்,
இனியன என்பேன் எனினும்—தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!

பொழிலிடை வண்டின் ஒலியும்—ஓடைப்
புனலிடை வாய்க்கும் கலியும்,
குழலிடை வாய்க்கும் இசையும்—வீணை
கொட்டிடும் அமுதப் பண்ணும்'

குழவிகள் மழலைப் பேச்சும்—பெண்கள்
கொஞ்சிடும் இதழின் வாய்ப்பும்,
விழைகுவ னேனும், தமிழும்—நானும்
மெய்யாய் உடலுயிர் கண்டீர்!

பயிலுறும் அண்ணன் தம்பி—அக்கம்
பக்கத் துறவின் முறையார்,
தயைமிக உடையாள் அன்னை—என்னைச்
சந்ததம் மறவாத் தந்தை,

குயில்போல் பேசிடும் மனையாள்—அன்பைக்
கொட்டி வளர்க்கும் பிள்ளை,
அயல்வராகும் வண்ணம்—தமிழ் என்
அறிவினில் உறைதல் கண்டீர்!

நீலச் சுடர்மணி வானம்—ஆங்கே
நிறையக் குளிர்வெண் ணிலவாம்,
காலைப் பரிதியின் உதயம்—ஆங்கே
கடல்மேல் எல்லாம் ஒளியாம்,

மாலைச் சுடரினில் மூழ்கும்—நல்ல
மலைகளின் இன்பக் காட்சி,
மேலென எழுதும் கவிஞர்—தமிழின்
விந்தையை எழுதத் தரமோ!

செந்நெல் மாற்றிய சோறும்—பசுநெய்
தேக்கிய கறியின் வகையும்,
தன்னிகர் தானியம் முதிரை—கட்டித்
தயிரொடு மிளகின் சாறும்,

நன் மதுரஞ்செய் கிழங்கு—காணில்
நாவில் இனித்திடும் அப்பம்,
உன்னை வளர்ப்பன தமிழா!—உயிரை
உணர்வை வளர்ப்பது தமிழே!

பெரியார் பிறந்தநாள் கொண்டாட்டம்

முறையே கேளாய்—என்ற மெட்டு

அறிவானந்த ராமசாமியார்
பிறந்த நாளிதை கொண்டாடுவோம்

பரிவுடன் கூடி கொண்டாடிடுவோம் நாம்
பாடியானந்த மதாய்
அகமும் புறமும் அன்பு ததும்பும்
அழகெழும் பிரபமிவர் அறிவின்

சொக்க வெள்ளியோவென சொல்லும் தாடியதுவும்
மிக்க சீரான தடியும் சிறந்த
காண கண்காட்சியாக விளங்கும்
வேணுகோபாலன் கவிதா னிலங்கும்

புரசை பி. எம். வேணுகோபால் பாகவதர் அவர்களால் பாடிய பாடல்கள்.

(சந்திரசூரிய போங்கதிர் மாரினும்—என்ற மெட்டு)

அந்தோ நமதருந் தலைவரீ வேராவை
அடைத்தனர் சிறையதனில்
செந்தமிழ்த் தாய்க்கு தொண்டியற்றியதால்
சினங்கொண்டா ச்சாரி-யாரும் (அ)

தமிழர்கள் தலைதூக்கி நடந்திடும் வழியினைத்
தான்மொழி சாற்றியதால்
அமிழ்த்திடவே சிறையி லழுத்தினாரந்தோ
அனியாயமா மிதுவே (அ)

அரசியல் மதபற் றதில்சமதர்மம்
அளித்திடு மென்றதினால்
திரமிகும் பதிலே சொல்வதற் கியலா
தழுத்தினார் சிறையதனில் (அ)

மாப்பெரியார் ஈ. வே. ராப்பெரியார் அவர்
தான் பெரியார் பெரியார்
மூப்பா மிக்கால மதை பொருட் படுத்தா(து)
மூலைக்தார் சிறை புகுந்தார் (அ)

(ஆசை லீலா—என்ற மெட்டு)

தமிழன்னையே தமிழன்னை நின்
தன்னிலைமார என்ன விதியோ
கமழ்ந்திடுமுன் சுகந்தமது
கலக்கமுற என்ன விதியோ (த

வடநாட்டு இந்திமொழி
வந்ததினாலே தான் தீது
படர்ந்த தறிந்தே துயர்
பாலர்கள் கொண்டோ மிப்போது (த)

மணிமே கலைக்குண்டல
கேசரி வளையாப்பதி
அணிந்தெழும் சிலப்பதி
காரமது வோங்குந் துதி (த)

கம்பனும் காளமேகனும்
கவிஒட்டக் கூத்தனுமே
அம்புவி வள்ளுவனரும்
பாரதி மகிழ்தனமே (த)

(பஜே பஜே நாராயணா—என்ற மெட்டு)

வீரத் தமிழர்களே —எங்கள்
வார்த்தையை கேட்பீர்களே—நீங்கள் (வீரத்)
பாரதில் நம் தாய் புலம்பி—கேட்டு
பேசாதிருத்தல் மிக்க மோசமல்லவோ நீங்கள் (வீரத்)
காங்கிரசென்ற கூட்டத்தாருறவால்
கனிரசமானத் தமிழ் மொழிகெடப் பார்க்கலாமோ
செந்தமிழ்த் தாயின் சிறப்பதைக் காக்க
நந்தமிழ் தலைவர்கள் தொண்டர்கள் சிறைச்சென்றார் (வீரத்)
பால்மணம் மாறாப் பாலர்களுடனே
பெண்கள் சிறைப் புகுந்தும், பார்த்திருப்பதழகோ (வீரத்)
காங்கிரசங்கம் என்பதை மறப்பீர்
கனிவுடன் தமிழ்மொழிக் காத்திட வருவீர் (வீரத்)
ஒன்று பட்டாலே உண்டுவாழ்வென்ற
உண்மை கடை பிடித்து நன்மைப் பெறுவீர் (வீரத்)
தமிழரெல்லோரும் தானொன்றாய் சேர்ந்தால்
தலைவரென்பவர்த் தம்மைத் திருத்திக் கொள்ளாதோ (வீரத்)
தேனுயிர்த் திருத் தமிழன்பன்
வேணுகோபாலனினருந் தமிழ்க் கேளீர் (வீரத்)

தோழர் திருவாரூர் பாவலர் பாலசுந்தரம் இயற்றியது.

ஏனிந்த வாதம் (என்ற மெட்டு)

செந்தமிழ்த்தாயே! உந்தனின் சோதி
இந்தியாவின்று மங்கிடல் நன்றோ? (செந்)

தொகையறு

வெந்தனல் இந்தியால் விளைந்திடுங் கேடதில்
வீணுமே வந்தனது மொழிகள்
சந்ததி கற்று முன்னேறும் நல்வழிதனைத்
தாக்கியோர்க் கெய்ந்திடு பழிகள்

பாட்டு

உத்தாரம் தாரும் ஒருகொடிப் பொழுதில்
கொத்திடுவோ மிந்தி செத்திடத்தானே (செந்)

தொகையறு

சேரன் சோழன் பாண்டியன் ஆண்ட நாளிலே
தேன் தமிழ் தந்த தாயே
தென்னாட்டுக் கம்பனுன் பொன்மொழி தன்னுளே
தேர் ஓங்க வைத்திருந்தாயே

பாட்டு

ஆரியப் பேய்கள் அன்னையே உன்னை
வாரி யெறிந்திட வஞ்சமென் செய்தாய்? (செந்)

தொகையறு

என்னாளும் உந்தனைக் கண்ணென தாயென்று
எண்ணி நான் வாழ்ந்தேனே அம்மா
இன்னல்சேர் இந்தியால் என் தமிழ்த்தாயே நீ
ஏங்கியே நின்றிடலாமா ?

பாட்டு

கண்ணிழந் தாயோ கருந்தமிழ்த் தாயே
காதலன் பாலன் கவி மறந்தாயோ (செந்)

(சொல்லு பாப்பா—என்ற மெட்டு)

சொல்லு தாத்தா சொல்லு தாத்தா
சுதந்தர வழிதனைச் சொல்லு தாத்தா (சொ)

அல்லும் பகலும்தொண்டு செய்யும் தாத்தா—உன்னை
ஆரியர் வைவதென்ன சொல்லு தாத்தா
கொல்லும் புலிகாடி உன்னைக்கண்டால்—தாத்தா
கோலமாய் ஓடும்வழி என்ன தாத்தா (சொ)

பகுத்தறிவூட்டும் ராம சாமித் தாத்தா—நாங்கள்
பக்குவம் பெறவழி சொல்லு தாத்தா
மருத்துவ மில்லாமதி மடையர்கட்கு—தாத்தா
மானம் வரவே புத்திசொல்லு தாத்தா (சொ)

மஞ்சள் காமாலையென்னும் நோயை நீக்க—நல்ல
மருந்துவகைகளையே சொன்ன தாத்தா
உஞ்சிவிருத்தி யெல்லாம் உன்னைத் தாத்தா—கண்டால்
ஓடி யொழிவதேனோ சொல்லு தாத்தா (சொ)

தாடியை வைத்திருக்கும் தங்கத் தாத்தா—இங்கு
தமிழ்க்கலை ஓங்கவகை சொல்லு தாத்தா
கூடிக்குலாவிக்குடி கெடுப்பவர்கள்—தாத்தா
குந்தியழுகும் வழி சொல்லு தாத்தா (சொ)

இந்திப்பேயை விரட்ட வந்த தாத்தா—உனக்
கின்னல்கள் வந்தாலென்ன செய்வோம் தாத்தா
எந்தநேரத்திலுமுன் ஏக்கத்தாலே—தாத்தா
என்ன செய்வதென்றறியோமே தாத்தா (சொ)

பிள்ளைகள் கோடியுண்டு வீரத்தாத்தா—உன்னைப்
பின்பற்ற நாங்கள் உண்டு நில்லு தாத்தா
வெல்லும் வகையையிங்கு விள்ளு தாத்தா—தமிழ்
வெற்றிக்கொடி பறக்கச் சொல்லு தாத்தா (சொ)

காலத்தந்திரஞ் சொல்லுங் கண்ய தாத்தா—உந்தன்
கருத்தைக் சொல்லாயோ யின்றுபுண்யத் தாத்தா
பாலசுந்தரம் தமிழ் உன்னைத் தாத்தா—கண்டு
பாடித்துதிக்குதே யென்னாளும் தாத்தா (சொ)

(பஜனை செய்வோம் கண்ணன் நாமம்—என்ற மெட்டு)

பல்லவி.

தமிழனுக்கே தமிழ்நாடு—தஞ்ச மடைந்த தர்ப்பைத்
தாசர்க்கும் தாசர்க்கும் தமிழகத்துப் பங்கேது ? (தமி)

திருமலாபுரம் கே. ஷண்பகதாஸ்

(ஞானவேலா என்ற மெட்டு)

பாடுவோமே நாமே பாடுவோமே
பரவசமுடனென்று கூடுவோமே

பாடுபட்டுழைக்கும் நம்மை காந்தி போல்
பணம் பறிப்போர்க்கு நல்ல புத்தி சொல்லி
ஈடு இல்லாத் தமிழை இன்று காக்க
ஈழத்துச் சிவானந்தடிகள் இசை மொழி போல்
இந்தி வேண்டாம்—இந்தி வேண்டாம்
இந்திய மக்கள் நமக்கு இந்தி வெண்டாம்.

வானளாவிடத் தமிழ் வாழ்க வென்றே
மாசுரும் இந்தி பாஷைவீழ்கவென்றே
தானவனருணகிரி சாது போலின்றே
தளராது போர் புரியத் தமிழர் இன்றே
புறப்படுவோம்—சென்னை புறப்படுவோம்
புளகாங்கித மெய்திடப் புறப்படுவோம்

ஆரியர் சூழ்ச்சி தன்னில் வந்த மோசம்
அரட்டும் இந்தியால் தமிழ் அன்னை நாசம்
வீரியமாய் தமிழர் ஒன்றாய் வாசம்
மேதினியில் செய்திடில் உண்டோ தோஷம்
வெல்லுவோமே—போரில் வெல்லுவோமே
வீணர்கள் பாஷைதனைக் கொல்லுவோமே

ராமசாமிப் பெரியார் நல்லுபதேசம்
நாமறிந் தொன்றுபட்டால் நல்கும் நேசம்
தாமதித்துத் தூங்காதீர் தமிழின் பாசம்
தன்னை மதித்துப் பலர் சிறைவாசம்
செய்திடுவோம்—இன்னும் செய்திடுவோம்
ஜெயபேரிகை கொட்டிப் போர் செய்திடுவோம்

சத்யாக்கிரகத்துடன் போர் தொடுக்க
தமிழர் படையில் சேர்ந்துதானே நடக்க
சித்த மகிழ்ந் தெல்லோரும் சென்னையடுக்க
செண்பகதாஸன் தமிழ்ங்கீதம் படிக்க
செல்லுவோமே—இன்றே செல்லுவோமே
ஜெயம் நமதென்று சென்னை செல்லுவோமே

———